கம்பன்

கம்பன் கழகம், பிரான்சு

18 éme ANNIVERSAIRE FETE DE KAMBAN

திருவள்ளுவர் ஆண்டு 2050 22.09.2019

வைணவச் செந்தமிழ் வாரணம்

பாவலர்மணி சித்தனார்

06.01.1920 - 04.11.2018

பாவலர் மாமணியே! பைந்தமிழ்ச் சித்தனே!
நாவளர் சொல்லில் நடமிடுவாய்! - காவளர்
நன்மணமே! என்குருவே! உன்றாள் தொழுகின்றேன்!
பொன்மனமே! தாராய் புகழ்!

பாட்டரசர் கி. பாரதிதாசன்

பதினெட்டாம் ஆண்டு

கம்பன் விழா மலர்

IATA
CT
சேரன் டிராவல்ஸ்
சிறந்த முறையில் நிறைந்த பணிகளைப்
பெற்று மகிழ்ந்திட இன்றே நாடுங்கள்!
CHEARAN TRAVELS
BOEING
787
4, rue Cail - 75010 Paris
M° : Gare du Nord ou La Chapelle
Tel : 01 42 09 43 84
Fax : 09 81 70 56 93
Email : agence@chearantravels.com
Website : www.chearantravels.com

நிறுவுநர்
பாட்டரசர் கி. பாரதிதாசன்

தலைவர்
திருமதி பேரெழிலி பிரத்திகுமார்

துணைத்தலைவர்
திருமிகு தீபன் நடராசன்

செயலாளர்
பாவலர் நெய்தல் நாடன்

துணைச்செயலாளர்
திருமிகு பாரத்து கிருட்டினமூர்த்தி

பொருளாளர்
பாவலர் மணியன்செல்வி

துணைப்பொருளாளர்
திருமதி நித்திய பாரதி

செயற்குழு உறுப்பினர்கள்

பாவலர் ஈழ பாரதி
திருமதி தமிழ்மலர் தமிழ்வாணன்
திருமிகு சிலம்பரசன்
திருமதி தமிழ்மகள் கார்த்திகேயன்
பாவலர் தமிழிசை
திருமதி சான்சி சுரேசு
திருமிகு ழாக் இலிங்கம்

KAMBAN KAZHAGAM - FRANCE

Pattarasar K. Bharathidasan
6, rue Paul Langevin,
95140 Garges les Gonesse, France
e.mail: kambane2007@yahoo.fr
www.bharathidasanfrance.blogspot.fr
06 51 57 47 58

மலர் வடிவமைப்பு – தமிழ்நெஞ்சம் அமின்

கடவுள் வாழ்த்து

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.

கலியாண்டு 3986, சகாப்தம் 807 விசுவாவசு - பங்குனி 4 ஆம்நாள், (கி.பி. 886 பிப்ரவரி) புதன்கிழமை, துவிதியை திதி, அத்த நட்சத்திரம் கூடிய நன்னாளில் வெண்ணெய் நல்லூரில் இராமாயணத்தை அரங்கேற்றிக் கம்பன் கவிச் சக்கரவர்த்தி ஆனான்.

எத்திக்கும் போற்றும் இராமன் திருக்கதையைத்
தித்திக்கும் செந்தமிழில் செய்தளித்து - நித்தமும்
அம்புவியில் மக்கள் அமுதம் அருந்தவைத்த
கம்பன் கவியே கவி!

உள்ளம் மகிழ உரைநா அமுதூறக்
கொள்ளும் இருகாதும் குளிரவே - தெள்ளரிய
செந்தமிழ்க் கம்பத் திருநாடன் செய்நூலுக்கு
எந்நூ லாகும் இணை?

பாரில் பெயரோங்கும் பன்மொழிக்கும் நாணாது
நேரில் நிமிர்ந்துதமிழ் நிற்பதுதான் - சீருயர்ந்த
ஏறுபுகழ்க் கம்பன் இராமகதையால் வந்த
வீறுகொண் டென்று விளம்பு!

தமிழ்த்தாய் வணக்கம்!

நெல்முற்றி மண்வணங்கும்! நீர்முற்றிக் கடல்வணங்கும்!
பல்முற்றிச் சொல்வணங்கும்! படைமுற்றிக் கோன்வணங்கும்!
புல்முற்றி இறைவணங்கும்! புகழ்முற்றி ஊர்வணங்கும்!
சொல்முற்றி என்னெஞ்சம் தூயதமிழ் அடிவணங்கும்!

காய்முற்றிக் கனிவழங்கும்! கதிர்முற்றி நெல்வழங்கும்!
வாய்முற்றிப் புகழ்வழங்கும்! மதிமுற்றி அரண்வழங்கும்!
வேய்முற்றி இசைவழங்கும்! விதிமுற்றி வினைவழங்கும்!
தாய்..முற்றித் தருங்கவிகள் தரணிக்குத் தகைவழங்கும்!



கா..முற்றி மணமளிக்கும்! கலைமுற்றிச் சீரளிக்கும்!
மா..முற்றி நலமளிக்கும்! வயல்முற்றி வளமளிக்கும்!
ஆ..முற்றிப் பாலளிக்கும்! அருள்முற்றி அமுதளிக்கும்!
பா..முற்றித் தருந்தமிழே பாருக்குப் பயனளிக்கும்!

கொடிமுற்றி மலர்பூக்கும்! குணம்முற்றிக் கொடைபூக்கும்!
செடிமுற்றி எழில்பூக்கும்! திறம்முற்றிச் செயல்பூக்கும்!
முடிமுற்றி நரைபூக்கும்! நூல்முற்றி நிறைபூக்கும்!
அடிமுற்றி வருந்தமிழால் அகிலத்தில் அறம்பூக்கும்!

வேர்முற்றி மரமோங்கும்! தார்முற்றி இனிப்போங்கும்!
பேர்முற்றிப் பீடோங்கும்! கார்முற்றி மழையோங்கும்!
ஏர்முற்றி ஊரோங்கும்! இசைமுற்றி மகிழ்வோங்கும்!
சீர்முற்றி வருந்தமிழால் இவ்வுலகே செழித்தோங்கும்!

பாட்டரசர் கி. பாரதிதாசன்

இயற்கையைப் போற்றுவோம்!

1.
அன்னையாய் மண்மகளும் அள்ளியே தந்திடுவாள்
பொன்னாகக் காப்போம் புகழ்ந்து!

2.
புவிமகளே நின்வளத்தைப் போற்றுகின்றேன் கன்னல்
கவிதனில் வாழ்வாய் கமழ்ந்து!

3.
பஞ்சநதி நீராடல் பாவமதைப் போக்கிட
நெஞ்சம் அடையும் நெகிழ்வு!

4.
நிலஞ்செழிக்க வந்தாய்! நலஞ்செழிக்கும் ஈசன்
தலையில்..நீ செய்தாய் தவம்!

5.
திருவின் வடிவாய்த் திகழும் ஒளியே!
கருணை அருள்வாய் கனிந்து!

6.
வீட்டில் வணங்கும் விளக்கொளியே! என்னுள்ளக்
கூட்டில் ஒளியினைக் கூட்டு!

7.
கண்கள் அறியாக் கடவுளைப்போல் மென்காற்றே
உன்னை அறிவோம் உணர்ந்து!

8.
உருவேதும் இல்லை! உளம்பாடும் பாட்டின்
கருவாய் அமையும்..பூங் காற்று!

9.
ஆலமுண்ட ஈசனோ? ஆலிலைக் கண்ணனோ?
நீலமொளிர் வானின் நிறம்!

10.
வானமே கூரையாகி வையகம் காப்பதைக்
கானமாய்ப் பாடுவேன் காண்!

பாவலர் அன்பரசி

கனவெனச் சுட்டாள்!

சிட்டுமுக வெட்டுவிழி
எட்டியெனைச் சுட்டாள்!
தட்டுநிறை மொட்டுஇதழ்
கட்டவிழ விட்டாள்!

ஒட்டிவிடும் அட்டையவள்
கொட்டுமெழில் சிட்டாள்!
வட்டியுடன் பெட்டிநிறை
கொட்டிநகை யிட்டாள்!

சட்டெனவும் கட்டழகி
மெட்டசைய விட்டாள்!
அட்டியிலை தொட்டுவிடக்
கட்டளையு மிட்டாள்!

கட்டுஉடல் நெட்டுமுகம்
சுட்டுவிரல் தொட்டாள்!
பொட்டுநுதல் பட்டுஇதழ்
தொட்டுநல மிட்டாள்!

கெட்டியவள் கட்டிலினில்
தட்டியெனை விட்டாள்!
விட்டகலத் திட்டமிலை
தட்டியெழுப் பிட்டாள்!

சிட்டவளும் எட்டுத்திசை
முட்டகொடி நட்டாள்!
கொட்டுபறை மெட்டியொலி
இட்டமுடன் தொட்டாள்!

பட்டெனவும் விட்டிலெனத்
தொட்டுயிரை விட்டேன்!
வட்டுக்கதிர் தட்டியெனை
வெட்டியெனச் சுட்டான்!

அசோகன்
விராலிமலை

கண்ணா!

(நேரொன்றாசியத் தளை)

கண்ணா உன்மேல் காதல் கொண்டேன்!
வண்ணம் மின்னும் எண்ணம் கொண்டேன்!
பண்ணின் உள்ளே பாசம் வைத்தேன்!
மண்ணும் காணும் மங்கை உள்ளம்!
தென்றல் வீசத் திங்கள் பார்க்க
மின்னல் வேகம் மீட்டிச் சென்றாய்!
பெண்ணென் தேகம் பீதி கொள்ளக்
கண்ணா நீயோ கார்போல் போனாய்!
காவல் தெய்வம் காப்பாய் என்றே
ஆவல் கொண்டே அன்பாய் நோக்க
நேசக் கண்ணால் நெஞ்சின் உள்ளே
ஆசை பொங்க அன்பை இட்டாய்!
வேண்டாம் இந்த வேலை என்றே
தாண்டிப் போனால் தாவி வந்தே
கண்முன் நின்றாய்! காந்தப் பார்வை
பெண்ணென் உள்ளம் பேதை அன்றோ!
இன்பம் ஒன்றே ஏற்கும் நெஞ்சம்
அன்பு வைத்தால் ஆடிப் பாடும்!
உன்தன் நெஞ்சே என்தன் மஞ்சம்
என்றால் இன்பம் என்றும் வாழ்வே!

பாவலர் அருணா செல்வம்
பிரான்சு

எங்கள் இல்லம்

என்றும் உள்ளம் பொங்கிடுமே
எங்கள் வீட்டு நினைவினிலே!
அன்பில் திளைத்த அழகதுவே
அமுதில் ஊறும் மனையதுவே!
இன்பம் கொடுக்கும் உணர்வுகளால்
எழிலாய் நிற்கும் உயர்வதுவே!
ஒன்றாய் அமர்ந்தே உண்போமே
உறவு படரும் கொடிபோலே!

ஊரின் நடுவில் ஓர்வீடாம்!
உண்மை நிலைத்த ஒளிவீடாம்!
தாரின் மணமாய் நிறைந்திடுதே
தங்கத் தமிழாய்த் தழைத்திடுதே!
காரின் வளமாய் வாணியுந்தான்
கன்னல் பாக்கள் படைத்தாரே!
வாரி வழங்கும் அகமதுவே
வளர்ந்த நானும் வணங்கிடுவேன்!

பாவலர் மலர்வாணி செயராசு.

கம்பன் புகழ் வாழி!

கண்ணன் அருளால் பாடுகிறேன்!
கம்பன் தமிழால் பாடுகிறேன்!
எண்ணம் இனிக்கும் பாட்டரசர்
ஈந்த அருளால் பாடுகிறேன்!
வண்ணத் தமிழைக் காத்திடவே
வந்த அவையைப் பாடுகிறேன்!
மண்ணில் கம்பன் புகழ்மேவ
மகிழ்ந்து விருத்தம் பாடுகிறேன்!

உலகினர் வாழ்த்தும் கம்பன்
உயர்புகழ்க் கவிஞன் கம்பன்!
நலந்தரும் தமிழைக் கற்று
நன்மைகள் ஈந்த கம்பன்!
உலகிலே சிறந்த நூலை
ஓதிய தமிழன் கம்பன்!
குலவிடும் சீர்கள் தந்த
குணமொளிர் கம்பன் வாழி!

உயர்வெலாம் ஊட்டும் நூலை
ஓதிய கம்பா போற்றி!
துயரெலாம் நீங்கும் வண்ணம்
துணிவருள் கம்பா போற்றி!
மயக்கிடும் சொற்கள் கொண்டு
மனமுறும் கம்பா போற்றி!
இயக்கிடும் தேவன் சீரை
இசைத்திடும் கம்பா போற்றி!

தாயினின் அன்பைக் காட்டத்
தனித்தமிழ் தழைக்கத் தந்தான்!
வாயினில் சந்த மேவ
வாழ்கிற கவிகள் செய்தான்!
தீயினை பாவால் ஏற்றித்
தீமையை ஓட வைத்தான்!
காயினை நீக்கிக் கன்னல்
கனியெனக் கருத்தை ஈந்தான்!

நாவினில் சுவைக்கும் பாக்கள்
நாமெலாம் உண்ண வைத்தான்!
பூவிலும் தேனும் ஊறப்
பொற்றமிழ் அறத்தைச் சொன்னான்!
காவிய கம்பா உன்றன்
கால்களைத் தலைமேல் கொண்டேன்!
தூவினேன் பூவே! கம்பா!
தூக்கியே என்னைக் காப்பாய்!

பாவலர் ஆடலரசன்
பிரான்சு

முன்னவனே!

முழுமுதல் தெய்வமே! முன்னவனே! நாளும்
தொழுவோர்தம் துன்பம் துடைப்பவனே! பச்சை
மணிமாலை கொண்டவனே! மங்கை..நான் பாடும்
அணிமாலை ஏற்பாய் அணைத்து!

பாவலர் ஆதிலட்சுமி வேணுகோபால்
பிரான்சு

கடற்கரை

காவடிச் சிந்து

அலைமிசை நுரையெழ ஒளிதவழ் நிலையுறு
அழகிய மணலிடை எழில்நடை வளைநுழை
நண்டு ! - மகிழ்
வுண்டு !
நிலையிலை யெனும்நசை அலையெழு
அழகிடை
நிறுவிய அசைவினை வியனுற அலைபடும்
சங்கு ! - நிறம்
நுங்கு !

அணிகல னொலியெழ அலையிடை இடிபடும்
அணிமணி வகையுறு அணிநகை வளர்நனை
இப்பி ! - முத்துச்
சிப்பி !
மணியொளிர் எழுகதிர் இடுதிரை நெடுகிலும்
மனநிறை ஒளிபடர் அழகுட னெழும்அதி
காலை ! - துள்ளும்
வாளை !

கருநிற இரவிடை ஒளிமிகு மிளிர்நடை
கனவுறு ரதமென விசையுற வெளிவரும்
நிலவு ! - கரை
உலவு !
உருவெழில் மலர்நிகர் ஒளிர்மழை நிறைதரு
உயர்வெளி வழியிடை இரவினில் விரவிடும்
உடுக்கள் ! - பொழில்
வடுக்கள் !

இளவெயில் விரிவுற மதியொளி மறைபட
இளையவர் முதியவர் மணல்மிசை நடையிடும்
பயிற்சி ! - நல்ல
முயற்சி !
இளஅலை இமிழெழ எழிலலை வலம்வர
இளம்மொழி எதிரொலி மகிழ்வொடு நிலமிசை
வீசும் ! - தமிழ்
பேசும் !

பாவலர் இராதே

புதுவை

சிந்துவனர் பாரதியார் கவிகள் வாழ்க

பாரதியார் தமிழ்ப்புலவன் இனிது வாழ்க!
பாரினிலே அவன்புகழும் செழித்து வாழ்க!
சீரியநல் தன்கருத்தால் ஈர்த்த நல்ல
சிறப்புடைய கவிஞனவன் புகழும் வாழ்க!
தேரெனவே நிமிர்ந்தவோர் நடையும் வாழ்க!
திக்கெட்டும் அவன்பார்வை திளைத்து வாழ்க!
வாருதியே தமிழுலகின் தோற்ற மென்றும்
வான்கருணைப் புலவனவன் வாழ்க! வாழ்க!!

சிந்துப்பாச் சிந்தனையைச் சிறப்பாய்ப் பாடிச்
சீராகத் தமிழ்வளர்த்த சேவை யாலே
முந்துதமிழ்க் கம்பனவன் முறையைப் போற்றி
மூவாத முத்தமிழைக் காத்த வேந்தன்!
பந்தமென இளங்கோநற் புகழும் பாடிப்
பண்புடைய வள்ளுவனார் பெருமை பாடி
அந்தவொரு நற்கவியைப் போற்றி னாலே
அருந்தமிழைப் போற்றுகின்ற செயலு மாகும்!

பாவலர் இராமதாசு காந்தி
புதுவை

தமிழ்போல் நாம்வாழ்வோம்!

கண்ணா! உன்றன் குரல்கேட்கக்
கன்னி நெஞ்சம் அலைவதுமேன்?
வண்ணான் துவைக்கும் செயலாக
வனிதை மனத்தைத் துவைப்பதுமேன்?
அண்ணா போன்று மேடையிலே
அழகாய்ப் பேசும் சொல்லழகா!
புண்ணாய் வாட்டும் இப்பொழுதைப்
போக்கப் பூந்தேன் மருந்திடுவாய்!

ஏனோ என்னை மறந்தனையோ?
எல்லாத் திசையும் உன்னுருவே!
மானோ? மயிலோ? என்றுரைத்து
மயங்க வைத்த மொழியெங்கே?
தேனோ? தினையோ? தீங்கனியோ?
தேவா உன்றன் கவியாக்கம்!
ஊனே உருகி வாடுகிறேன்
உள்ளம் உவக்க விருந்திடுவாய்!

வீரப் பார்வை பாய்ச்சாதே!
வேகும் கஞ்சாய்க் காய்ச்சாதே!
ஓரப் பார்வை ஒவ்வொன்றும்
உயிரைப் பிழிந்து குடிக்குதடா!
ஈரம் இன்றி இருப்பதுவோ?
இளமை வாட நடப்பதுவோ?
தாரம் ஆக்கி என்வாழ்வு
தழைக்க இன்பம் பொழிந்திடுவாய்!

அல்லும் பகலும் உன்னெண்ணம்!
அடுப்பில் கூட உன்தோற்றம்!
பல்லும் துலக்கிக் கண்ணாடி
பார்க்க அங்கே உன்னுருவம்!
செல்லும் சோலைப் பாதையிலே
சிரிக்கும் வண்டாய் உனைக்கண்டேன்!
கொல்லும் இரவு காலத்தை
வெல்லும் உன்றன் கனவுகளே!

முள்ளாய் இருந்த என்வாழ்வை
முல்லைக் காடாய் நீசெய்தாய்!
வில்லாய்ப் பாயும் கற்பனைகள்!
கள்ளாய் மயக்கும் ஒப்பனைகள்!
எல்லாப் பிறப்பும் உன்னுடனே
இணையும் வாழ்வை வேண்டுகிறேன்!
சொல்லால் பொருளால் சுவைகூட்டும்
தூய தமிழ்போல் நாம்வாழ்வோம்!

பாவலர் இளமதி
சருமனி

யார் தமிழன்?

யார்தமிழன்? யார்தமிழன்? என்றென்னைக் கேட்டார்
எழிற்குமரிக் கண்டத்தில் பிறந்தவனாம் என்றேன்!
யார்தமிழன்? யார்தமிழன்? என்றென்னைக் கேட்டார்
இமயத்தின் உச்சிதனை வென்றவனாம் என்றேன்!
யார்தமிழன்? யார்தமிழன்? என்றென்னைக் கேட்டார்
ஏழைகளின் சொல்லுக்குப் பணிபவனாம் என்றேன்!
யார்தமிழன்? யார்தமிழன்? எனக்கேட்டார் மக்கள்
இதயத்தை நேசிக்கும் பண்புடையோன் என்றேன்!

யார்தமிழன்? யார்தமிழன்? என்றென்னைக் கேட்டார்
எமனுக்கும் அஞ்சாத வீரனென்று சொன்னேன்!
யார்தமிழன்? யார்தமிழன்? என்றென்னைக் கேட்டார்
எந்நாளும் தமிழகத்தின் நலம்செய்வோன் என்றேன்!
யார்தமிழன்? யார்தமிழன்? என்றென்னைக் கேட்டார்
எதிரியையும் நேசிப்பான் அவனென்று சொன்னேன்!
யார்தமிழன்? யார்தமிழன்? என்றென்னைக் கேட்டார்
என்னுயிரே தமிழென்பான் அவனென்று சொன்னேன்!

யார்தமிழன்? யார்தமிழன்? என்றார்..யா ராலும்
இயலாத கோவிலினை எழுப்பியவன் என்றேன்!
யார்தமிழன்? யார்தமிழன்? என்றென்னைக் கேட்டார்
வெள்ளையனை எதிர்த்த»வ.உ சிதம்பரனார்» என்றேன்!
யார்தமிழன்? யார்தமிழன்? என்றென்னைக் கேட்டார்
இலங்கையிலே எழுந்த»பிர பாகரனாம்» என்றேன்!
யார்தமிழன்? என்பதனை இங்குரக்கச் சொல்ல
ஏடுகளே போதாது எழுந்துபோடா என்றேன்!

ஏறன் சிவா,
தமிழ்நாடு

தாயே வணங்குகிறேன்!

தாய்மை போற்றி வளர்த்தாயே!
தாகம் தீர்த்து வைத்தாயே!
பண்பை ஊட்டிப் பகிர்ந்தாயே!
படிப்பைக் கற்றுக் கொடுத்தாயே!
செயலில் நேர்மை என்றாயே!
சேர்ந்தே வாழத் துடித்தாயே!
கண்ணன் வழியில் நடந்தாயே!
கதைகள் சொல்லி மகிழ்ந்தாயே!
உண்ண உணவு அளித்தாயே!
உளமாய் வாழ்த்தி உணர்ந்தாயே!
பள்ளி செல்லப் பணித்தாயே!
பணியை வாரி அளித்தாயே!
வள்ளல் வாக்கை நினைத்தாயே!
வசந்தம் வாழ்வில் தந்தாயே!
துயரம் யாவும் மறந்தாயே!
துயிலை வாழ்வில் துறந்தாயே!

பாவலர் சிரீதரன்
பிரான்சு

உலகை ஆண்டமொழி

உலகைக் காத்தே ஆண்டமொழி
உள்ளம் களிக்கும் இன்பமொழி!
கலையை ஊட்டும் கன்னல்மொழி!
கவிதை தீட்ட கனிந்தமொழி!
உலகோர் போற்றும் சிறந்தமொழி
உயிரில் கலந்த அன்புமொழி!
தலத்தில் ஆடும் தெய்வமொழி
தனித்தே ஓங்கும் தமிழ்மொழியே!

மண்ணின் மாண்பைப் படைக்கின்ற
வளமைத் தமிழைக் காக்கின்ற
எண்ணம் சிறிதே கைக்கொண்டால்
ஏற்றம் நம்மை நாடிவரும்!
திண்ணம் செழுமை அதிலுண்டு!
திறமை யோங்கும் வழியுண்டு!
கண்ணாய்க் கருதிப் போற்றிடுவோம்!
கவிதை பாடிச் சாற்றிடுவோம்!

நீக்கு நீக்குப் பிறமொழியை!
நினைவில் ஏந்து செந்தமிழை!
நோக்கு நோக்கு நுண்ணறிவால்
நுவலும் உண்மை வரலாற்றை!
போக்குப் போக்குப் பொய்யுரையை!
புவியோர் உணர மெய்யுரைப்போம்!
ஊக்கு ஊக்குத் தமிழோங்க!
உலகம் போற்றும் தமிழினத்தை!

பாவலர் மாலரன் அடிகள்
சென்னை

ஆன்மீகம்

அன்பால் உறவு மலர்ந்திடவும்
அறத்தால் வாழ்வு கமழ்ந்திடவும்
நன்றாய் நெறிகள் தழைத்திடவும்
நலமே எங்கும் விளைந்திடவும்
குன்றாய்க் கருணை பெருகிடவும்
கொடுக்கும் குணமே நிறைந்திடவும்
வென்றே உலகில் சிறந்திடவும்
வேராய் வேண்டும் ஆன்மீகம்!

பொல்லாச் சினத்தைப் போக்கிடவே
பொறுமை கடமை பேணிடவே
நல்லார் வழியில் நடந்திடவே
நல்லூழ் பயனைப் பெற்றிடவே
தொல்லோர் ஒழுக்கம் பிடித்தொழுகித்
தூய்மை இன்பம் துய்த்திடவே
பல்லோர் போற்றப் பண்புறவே
பழகும் பாதை ஆன்மீகம்!

திருவுஞ் சீரும் தந்திடுமே!
தேனாய் வாழ்க்கை இனித்திடுமே!
பொருளை அளிக்கும் புவியினிலே!
புகழால் உவந்து பொலிந்திடவே!
இருளைக் கெடுக்கும் இன்சுடராம்
எழிலாய் உள்ளம் ஒளிர்ந்திடவே
அருளை அளித்தே அகத்தினிலே
ஆற்றல் பெருக்கும் ஆன்மீகம்!

சிந்தை சீலம் செழித்தோங்கும்!
சீர்மை வாய்மைக் குணமோங்கும்!
விந்தை மாந்தர் வேற்றுமையை
விழலாய்க் களைய விழைந்தேகும்!
முந்தை வினைகள் வடிந்திடுமே!
மோதும் துன்பம் முடித்திடுமே!
எந்தை ஈசன் திருவடியை
என்றும் வாழ்த்தல் ஆன்மீகம்!

அன்பே என்றும் ஆன்மீகம்!
அமைதி என்றும் ஆன்மீகம்!
நன்றே மனத்தை அடக்குவதும்
நறுந்தேன் ஊறும் ஆன்மீகம்!
வென்றே பொறியைக் கட்டுவதும்
விண்ணின் ஒளிசேர் ஆன்மீகம்!
இன்றே ஏழை துயர்துடைத்தல்
ஈடே இல்லா ஆன்மீகம்!

பாவலர் கவிப்பாவை
பிரான்சு

அருள் விருத்தம்

அருந்தவத் தாயே போற்றி!
அமுதருள் இறையே போற்றி!
பெருந்தவ முதலே போற்றி!
பீடுடைப் பேறே போற்றி!
மருளழி ஒளியே போற்றி!
மனமுறும் காற்றே போற்றி!
திருவளர் சீரே போற்றி!
சிவசிவ ஒலியே போற்றி!

சிவமகன் முருகா போற்றி!
செம்மலர் அழகா போற்றி!
தவமொழிச் செல்வா போற்றி!
தாமரை நெஞ்சா போற்றி!
உமையவள் மைந்தா போற்றி!
ஒண்டமிழ்த் தலைவா போற்றி!
எமைநலம் சேர்ப்பாய் போற்றி!
ஈடிலா இறையே போற்றி!

திருமகள் தலைவா போற்றி!
தேவரின் மன்னா போற்றி!
திருமலை வாசா போற்றி!
தென்றமிழ் அரங்கா போற்றி!
உருவொளிர் மாயா போற்றி!
உயர்வருள் நேயா போற்றி!
மறுப்பிறப் பறுப்பாய் போற்றி!
மலர்மகள் மகிழ்வே போற்றி!

பாவலர் தமிழிசை
[திருமதி கீதா சிபி]
பிரான்சு.

ஞானப் பெண்ணே

வானுயர் திறனை, மாண்புயர் பண்பினை
மானுடம் நித்தம் வாழ்த்தும் கற்பினை
ஏந்தியே நாளும் எந்நிலை வரினும்
ஏந்திழை காப்பாள், ஏற்றே மகிழ்வாள்!
சுற்றம் பார்த்துச் சுகமே அளித்து
முற்றும் தன்னை முழுதாய்த் தருமோர்
அற்புதம் கண்டும் ஆவலாய் நின்றும்
சொற்களைக் கூட்டிச் சுவையாய்ப் பகிர
உற்றவர் யாரும் உவப்பதும் இல்லை!
பெற்றிடும் பேறு உழைப்பே அன்றிச்
சிறகினை விரித்துச் சிரித்தே வானில்
பறந்து திரியப் பரவசம் எய்திட
உரிமை உண்டோ ஞானப் பெண்ணே!

பாவலர் சிமோன் இராசேசுவரி
பிரான்சு

மக்கள் கவிஞர்
பட்டுக்கோட்டையார்

வண்ணவண்ணக் கனவுகளும், வளமான கற்பனையும்,
எண்ணமொளிர் பதிவுகளும், இலக்கியமும், வாழ்வியலும்
கருவாகித் திரையினிலே கதையாக நகர்ந்திடுமே!
உருவாகும் கதைக்கேநல் உயிரோட்டம் இசைப்பாட்டு!
முன்னாளின் திரைப்பாடல் மொழிந்தனவோ புரிந்ததிலை
இந்நாளில் வரும்பாட்டை இயம்புதற்கோ மொழியுமிலை
எந்நாளும் எளியவர்க்கும், இதயத்தை வருடிவிடும்
பொன்னான வரிகளிலே பொலிந்துவரும் கவித்துவமே!
பாரதிக்கும், பாரதியின் தாசனுக்கும் வாரிசென
நீரலைபோல், கவிதைகளை நேர்த்தியுடன் எழுதியவன்!
காவிரிக் கரையோரம் கழனிகளில் பயின்றவனாம்!
நாவேறித் தமிழ்கொஞ்சும் நம்பட்டுக் கோட்டையெனும்
கல்யாண சுந்தரமிக் கலையுலகின் விந்தைமகன்!
பல்வகைப் பார்வைகளால் பள்ளியிலே படிக்காமல்,
பகுத்தறிவுக் கொள்கைகளில் பறிகொடுத்த மனத்தவனாம்!
வகுத்தறியும் தனியுடைமை வழக்குதனை எதிர்த்தவனாம்!
பதினேழு தொழில்களிவன் பழகிவந்த காரணத்தால்,
அதிலூறும் அனுபவத்தை அடுக்கிவைத்தான் பாட்டினிலே!
எதுவாக இருந்தாலும், எவ்வகைதான் ஆனாலும்,
பொதுவுடமைக் கருத்துகளைப் புகுத்திடுவான் பொறுப்புடனே
கடைநிலையில் இருப்போரின் கண்ணீரைத் துடைத்திடவும்,
நடைபோடும் சமுதாயம் நலிவின்றி வலிவுறவும்,
பாமரர்க்கும், படித்தவர்க்கும், பாப்பாவின் சிந்தனைக்கும்,
சேமமுறச் சிறுவர்க்கும் சேதிசொன்ன நல்லறிஞன்!
வழிவழியே நம்மிடையே வரும்மூடப் பழக்கங்கள்
ஒழிந்திடவே, விழிப்புணர்வை உரைத்தவனாம் புரட்சியுடன்!
உழைப்பாளர், தொழிலாளர் உரிமைகளை உணர்ச்சியுடன்,
தழைக்கின்ற வழிகளையே தரணிக்குச் சாற்றியவன்!
முகத்தோடு முகம்வைத்து முத்தமிடும் வேளையிலும்
இகத்தினிலே சுகமெல்லாம் இருவர்க்கும் பொதுவென்றான்!
மக்கள் திலகத்தின் மகத்தான பலபாடல்
மக்கள் கவிஞனிவன் மனத்துதித்த தத்துவங்கள்!
இருபத்தொன் பதாண்டே இருந்தவனின் எழுத்தினிலே,
கருக்கொண்ட பொருளெல்லாம் கரும்பாக இனித்திடுமே!
வாழும்எம் தமிழ்நாட்டில் வளர்தமிழின் கலைஞர்கள்
வாழுகின்ற காலமெலாம் வாழுமிவன் பெயரென்றே
கண்ணதாசன் காட்டுகிற கல்யாண சுந்தரம்நம்
எண்ணத்தில், சமுதாய எழுச்சியினை ஊட்டியவன்!
யாமறிந்த திரைக்கவியாய் எளியேனின் மொழிகளிலே
பாமலர்தான் படைத்தளித்தேன் பணிந்து.

பாவலர் சரோசா தேவராசு

காவிரியே

தடைபோட்டுத் தடுத்தாலும் தமிழ்நாட்டின் வளம்காக்கத்
தயங்காமல் தவழ்ந்தோடிவா!
இடையூறு கொடுத்தாலும் இமைப்போதும் அசராமல்
இயல்பாக எதிர்த்தோடிவா!
விடைகூறி விரைவாக விவசாயம் செழித்தோங்க
விருப்போடு சிரித்தோடிவா!
புடைசூழ வருவோரின் புரியாத பகைமாற்றிப்
பொலிவோடு புரண்டோடிவா!
அடைத்தாலும் மறித்தாலும் அடங்காமல் திமிராக
அணைப்போரை இனங்காணவா!
மடைதாவி விளையாடி மருண்டோடும் கயல்மீனை
மறவாமல் உடன்கூட்டிவா!
நடைபோட்டு மிடுக்காக நதியேயுன் எழிலோடு
நலம்வாழக் குதித்தோடிவா!
கடைத்தேற வழிபார்த்துக் கருவாயுன் கவிகேட்டுக்
கனிவோடு களித்தாடிவா!

பாவலர் சியாமளா இராசசேகர்
சென்னை

அகலிகையின் கனவுக் காதல்

முழுமதி பொலிவைக் கொண்டு
முல்லையின் சிரிப்பைக் கூட்டி
விழிஇமை வேலால் ஆக்கி
வியந்திடும் உடலில் தந்தான்
தழுவிடும் மலரின் மென்மை
தனிக்குயில் குரலின் ஓசை!
அழகுடன் படைத்தான் வேதன்
அகலிகை என்னும் மங்கை!

அழகுடை நங்கை மீது
அமரனும் கொண்டான் காதல்!
பழிதனைத் தவிர்க்க வேதன்
பண்புடை முனிவர் தேடி
எழிலுடை மகளைத் தந்து
இனிதுடன் சேர்த்து வைத்தான்!
கொழுந்திடும் அமரன் காமம்
கொணர்ந்தது முனிவர் உருவம்!

அகமுடைக் கணவன் போன்று
அமரனின் உருவம் தோன்ற
அகலிகை நயனக் கண்கள்
அமரனும் நெருங்கக் கண்டு
முகமெலாம் முறுவல் கொண்டு
முடிவினில் தன்னைத் தந்தாள்!
பகமுடை முனிவர்க் காண
பாவையும் முடிந்தாள் கல்லாய்!

அருந்தவன் இல்லம் உள்ளே
அருமையாள் இல்லை என்று
புரிந்தபின் இராமன் மெத்த
புனிதமா தாள்கள் தீண்ட
சரிந்தவள் உருவம் மீளத்
தவமுனி கொண்டான் இன்பம்!
இருந்தவர் எல்லாம் வாழ்த்த
இனியவள் சேர்ந்தாள் மீண்டும்!

கணவனின் அன்பில் ஏங்கிக்
கல்லினுள் வாழ்ந்த காதல்!
குணங்களில் உயர்ந்த வள்ளல்
கோகுல இராமன்தாள்கள்
கணத்திலே மீட்டக் காதல்!
கருணையில் மீண்ட காதல்!
அணைந்தபின் ஒளிர்ந்த காதல்!
அகலிகை தொன்மைக் காதல்!

பாவலர் தணிகாசமரசம்
பிரான்சு

கம்பன் புகழ் வாழ்க

கன்னித் தமிழில்
காவியம் பாடிக்
கம்பன் எனுமோர்
கண்ணியன் வாழ்ந்தான்!

கம்பன் ஒருவனே
கவிதைத் தலைவன்!
கவிவளம் புவிவளம்
காத்த புலவன்!

புலமை மின்ன,
பொதுமை கமழ,
நலமே மேவ,
நாடுக கம்பனை!

மென்மைப் பனிபோல்
மெல்லினச் சொற்கள்!
வன்மை மலைபோல்
வண்ணச் சீர்கள்!

உலகம் யாவும்
ஓங்கி யளந்தவன்!
குலவும் தமிழைக்
கொஞ்சிக் களித்தவன்!

இலக்கண வளமை
இலக்கியப் பெருமை
கலக்கி அளித்த
கம்பன் வாழ்கவே!

உலக அனுபவம்
உன்கவி பேசும்!
உவமை பற்பல
உயர்மணம் வீசும்!

இன்பம் தமிழ்மொழி!
இனிமை தமிழ்மொழி!
அன்பே தமிழ்மொழி!
அமுதே தமிழ்மொழி!

அள்ளி யளித்த
அருமைக் கம்பனைச்
சொல்லில் வடித்தேன்
சுவைப்பீர்! சுவைப்பீர்!

திருமிகு பழனி. சிவஅரி
பிரான்சு

கவியரசர் கண்ணதாசன்

கண்களில் காணும் காட்சியின் அழகை
வண்ணம் தீட்டி, வர்ணனை ஆக்கி,
இனிமையும், அழகும், எளிமையும் சேர்த்தே,
இனிக்கும் தேனாய் இதயம் விரும்பச்,
சொல்லும் கருத்தின் சொல்நயம் விளங்க,
வெல்லும் தமிழில் விருந்து படைத்தவன்!
தத்துவப் பொருளையும் தகைசால் உவமையில்,
முத்துப் பரல்களாய் முடுக்கியே கோத்துப்,
பாவியம் சிறக்கும் பாங்கினில் அமைத்த,
காவியத் திரைக்கவி கண்ண தாசனே!
திரையிசைப் பாடலைத் தேர்ந்த யாப்பினால்,
திரைத்தமிழ் இலக்கியத் தெளிவினைத் தந்தவன்!
புரியாப் புதிருள் பொதிந்த பொருளையும்,
அரிதாய் எடுத்தே அளித்திடும் பெற்றியன்!
இன்னல் கண்டே இடறும் மனத்தில்,
இன்பம் கூட்டும் இனிமை வழியை,
எண்ணம் விழையும் ஏற்புடை அமைப்பில்,
சின்னஞ் சிறிய சீரிய அடிகளில்,
ஒல்லையில் கொடுத்திடும் உயர்கவி வேந்தன்!
எல்லையில் ஆற்றலால் ஈட்டினான் புகழே!
தாய்க்குலம் போற்றவே தாலாட் டிசைத்தான்!
தாய்மையைத் தெய்வமாய்த் தரணியில் உயர்த்தினார்!
நித்தமும் வாழ்க்கை நிகழ்வினில் நெகிழ்ந்து,
சித்தம் கலக்கும் சிக்கலின் தீர்வினைப்
படிப்பே அறியாப் பாமரன் புரிந்து,
படிப்பினை பெற்றிடும் பாடலை அளித்தவன்!
கண்ணிய அரசியல் கடமைகள் உரைத்தவன்!
மண்ணினில் மாந்தர் மனத்தினைப் படித்தவன்!
காலமும் நிலைத்திடும் கவிதைப் புனைவில்
ஞாலமே போற்றிடும் நம்கவி அரசன்!
ஈதலின் மேன்மையை இசைபடப் போற்றினான்!
காதலைப், பக்தியைக் காவியம் ஆக்கினான்!
எதையும் எதிர்கொளும் இதய உறுதியால்,
உதயம் காணும் உய்வழி உரைத்தான்!
வள்ளுவன் குறளோ வாழ்க்கை நெறியாம்!
தெள்ளிய கம்பனோ தீஞ்சுவை அமுதாம்!
கண்ண தாசனின் கவிதை வரிகளோ,
எண்ணம் ஊன்றி எழுதிடத் தூண்டுமே!
உலகில் தமிழர் உளநாள் வரையில்
நிலைத்த புகழால் நெஞ்சுள் வாழ்வான்!
அன்னவன் சீரை அகவல் பாவில்
சொன்னேன் நானே! சுவைத்தீர் நன்றே!

பாவலர் வே. தேவராசு
பிரான்சு

குறள் வெண்செந்துறை

செஞ்சொல் வழக்கைச் சீராய்ப் பேணித்
தஞ்சம் அடையத் தழைக்கும் வாழ்வே! (1)

தாய்மொழித் தமிழைத் தலையாய்க் காப்போம்
சேய்மொழி அதுவே சீராய் அளிப்போம்! (2)

வண்டமிழ் இலக்கணம் வழங்கும் நூல்கள்
என்றுமே இனித்திடும்! எற்று மகிழ்க! (3)

தண்டமிழ் மொழியைத் தரணியில் போற்றுவோம்
எண்ணி உணர்ந்தே இணைந்து காப்போம்! (4)

செந்தமிழ்ச் சொல்லே செந்தேன் நல்கும்!
பந்தமாய்க் கொள்வோம் பாரில் உவந்து! (5)

நற்றமிழ் என்றும் நலந்தரும் என்பேன்!
பற்று வைப்போம் பரமனாய் ஏற்று! (6)

பண்டைத் தமிழே படர்புகழ் நல்கும்!
செண்டைப் போன்று செழித்து மணக்கும்! (7)

சொற்றமிழ்ப் பாக்கள் சுவைக்கும் என்றே
பொற்றமிழ் மாலை புனைந்தனள் ஆண்டாள்! (8)

செந்தமிழ்க் கடவுள் செந்தில் முருகன்
நந்தமிழ் மொழியில் நலத்தை உண்டான்! (9)

இன்றமிழில் உள்ளது இன்சொல் வீடு!
இன்பம் அளிக்கும் என்றும் பாடு! (10)

பாவலர் ந. கிருட்டினமூர்த்தி
சென்னை

இளவேனில்

வசந்தம் வீசும் இளவேனில்!
வாழ்க்கை வண்ண வடிவாகும்!
பசுமை நிறைந்தே கழனிகளும்
பார்க்கப் பார்க்கக் குளிர்ச்சிதரும்!
இசைகள் பாடும் புள்ளினங்கள் !
இணைகள் சேர்ந்தே கூடமைக்கும்!
அசையா மனமும் இசைவாகும் !
அழகாம் இயற்கைச் செழிப்பாலே !

வெள்ளை நிறத்து மல்லிகையும்
விதங்கள் பலவாய் ரோசாவும்
கொள்ளை கொண்டு போகினவே!
குழலிற் சூடச் சொல்லினவே!
உள்ளம் மெல்லச் சிலிர்க்கிறதே !
உவகை யாலே வழிகிறதே!
கள்ளம் இல்லா இயற்கையதில்
கஞ்சத் தனங்கள் காணலையே!

மாந்தர் நமக்கே அறிவூட்டும்
மாசில் லாத மண்ணுலகம்!
வேந்தர் கூடத் தலைவணங்கும்
வியப்பைத் தருதே அளவின்றி!
சாந்த சீலர் எல்லோரும்
சக்தி பெற்றார் வசந்தத்தில்
காந்தம் போலே எமையீர்க்கும்
கலையாம் காலம் வாழியவே!

பாவலர் யசிந்தா கருணாநிதி
செர்மனி

கம்பன் புகழ் வாழி!

அன்னைத் தமிழை, அருங்கவி ஆசானை
முன்னே அமர்ந்துள்ள முத்தமிழ் - அன்பரை
நன்னெய்தல் நாடன் நயந்து பணிகின்றேன்
பொன்னெய்தும் பாக்கள் புனைந்து!

ஓசை எழும்அலை ஓங்கு கடல்நீரைப்
பூசைமுற்றும் நக்குபு புக்கெனவே - ஆசையுற்றேன்!
தேரழுந்தூர்த் தென்னவன் செந்தமிழின் சீருரைக்கப்
பாரெழுந்து போற்றும் பணிந்து!

ஒப்பில்லா நற்றமிழில் ஓராறு காண்டங்கள்
இப்புவி மீதில் இயம்பினான்! - முப்பொழுதும்
தண்டமிழ் எண்ணித் தவங்கொண்ட கம்பனின்
பண்ணமுதை உண்போம் பணிந்து!

பொன்னெழில் மின்னும்! புதுமைத் தமிழோங்கும்!
வன்புவி இன்ப வளமேந்தும்! - மன்பதையின்
வாழ்வியலைக் கண்டுரைக்கும்! வண்ணக் கவியழகை
ஏழ்பார் உரைத்திடுமே ஏற்று!

பண்பொளிரும் காப்பியத்தைப் பைந்தமிழின் ஓவியத்தை
எண்ணமொளிர் கம்பன் இசைத்திட்டான்! - தண்டமிழின்
மேன்மைமிகு தத்துவத்தால் வெல்லும் வழிசொன்னான்!
வான்புகழ் கம்பனை வாழ்த்து!

பாவலர் நெய்தல் நாடன்
பிரான்சு

குறளின் குரல்

சித்தம் தெளிவுறுத்தும்! சீரோங்கும் வாழ்வினை
நித்த முயர்த்தி நிலைநிறுத்தும்! - சொத்தெனவே
இல்ல முறையை இயம்பும் திருக்குறளே
நல்லதொரு நூலாம் நமக்கு!

ஆன்மப் பயிருக் கருமருந்தாய் ஆழ்மனத்துள்
தேன்மழை பெய்யும் திருக்குறளே! - ஊன்மகிழ
இன்றி யமையா இனியநன் னீரெனவே
பன்னலம் சேர்க்கும் பரிந்து!

ஆசையும் பொய்யும் அடங்காப் பொறாமையும்
வாசம் குலைக்குமவ் வஞ்சகமும் - நீசமென
உள்ள முணர வுரைத்த பெருநூலாம்
கள்ளம் எரிக்குங் கனல்!

தென்றலென வீசியே தேனனையக் காதலினை
மன்னி யுரைத்த மணநூலாம் - பொன்னெனவே
நெஞ்சத்திற் கொள்வோம் நெறிபட வாழ்ந்திடுவோம்!
அஞ்சுவை கூடும் அகத்து?

தாங்கும் தடையழிக்கும்! தாளவரும் துன்பமுற்
றேங்கும் உயிருக் கிதமுரைக்கும்! - தீங்ககற்றி
மன்னுயிர் காக்கும் மணக்கும் திருக்குறளே
என்னுயிர் என்பேன் இனித்து!

அகன்று விரிந்ததோர் ஆகாயம் தானோ?
இகபரம் ஈயும் இறையோ? - சுகமனைத்தும்
சொல்லில் பெருக்கிச் சுடரும் திருக்குறளை
வெல்லவும் நூலுண்டோ வேறு?

காலைப் பரிதியெனக் கற்றார் மனத்தொளிரும்!
வேலை யெனவே வியப்பளிக்கும்! - சோலைதரும்
ஆலைக் கரும்பெனவே அத்தனையும் தித்திக்கும்!
கோலக் குறளின் குரல்

அஞ்சுதலை நீக்கியே ஆறுதலைத் தந்தருளும்!
தஞ்சமென நிற்கும்! தகையருளும்! - நெஞ்சமுறச்
செஞ்சொல் அருளும்! செழுங்கண் குயிலிசையாய்க்
கொஞ்சும் குறளின் குரல்

பாவலர் பத்மனி கேசவகுமார்
சேலம்

எழுதுகோலும் கண்ணும் வாளும்

கூருண்டாம்! கொண்ட குகையுண்டாம்! குத்துகின்ற
போருண்டாம்! பூத்த பொலிவுண்டாம்! - நீருண்டாம்!
ஆளுண்டாம்! தாள்காண் அழகுண்டாம்! கோல்..முன்னே
நீளுண்ட வாள்,கண் நிகர்!

ஆள் - ஆட்செய்கை, அரசு.

எழுதுகோல்

கூர்மை கொண்டிருக்கும். மூடியால் மூடியிருக்கும். எழுத்துப்போர் நடத்தும். மலர்ச்சியை நல்கும். நீர் போன்ற மையை ஏற்கும். அது எழுதிய எழுத்து உலகில் நிலைத்திருக்கும் [எழுத்து ஆற்றலால் ஆட்சி அடைந்தவர் உள்ளார்] தாளில் எழுதும்போது அழகேந்தும்.

கண்

தாக்கும் தன்மையால் வேல்விழி என்று பெயர்பெறும் [கூர்மை]. கண்ணை இமையானது மூடிப் பாதுகாக்கும். காதல் போர் நடத்தும். மலர்விழி என்றும் பொன்விழி என்றும் எழிலேந்தும். கண்ணீரைக் கொண்டிருக்கும். கண்ணழகில் ஆட்பட்டுக் கிடப்போர் உள்ளார். கண் நாணமுற்று மண்ணைப் பார்க்கும்பொழுது பேரழகு கொள்ளும்.

வாள்

கூர்மை கொண்டிருக்கும். குகைபோன்று உறையிருக்கும். பகைவரைச் சாய்க்கப் போர் செய்யும். பெற்றிபெற்றுச் செழிப்பை வழங்கும். செந்நீரில் நனையும். உலகை வென்று ஆளும். மறவன் வாள் முனையைத் தன் கால் அருகே வைத்து நிற்கின்ற காட்சி அழகளிக்கும்.

எனவே, நீள்விழி, நெடுவாள், எழுதுகோல் ஆகியவை ஒன்றுக்கொன்று நிகராகும்.

பாட்டரசர் கி. பாரதிதாசன்



இராவணனின் இசைக்கு மயங்கிய ஈசன்!

[கலிவெண்பா]

விண்முட்டும் மாடங்கள்! விண்ணுந்து செல்லிடம்!
மண்ணிதில் காணாத மாநகரம் - எண்ணங்கள்
எட்டாத தன்மைகள் யாவையும் கொண்டுமே
பட்டாக மின்னிய பட்டணம் - கட்டற்ற
சேனையும் மட்டற்ற செல்வமும் உற்றோங்கித்
தானைத் தலைவனாய்த் தாராண்டான் - வானாண்டான்!
பல்கலை வித்தகன்! பண்ணார் தமிழ்மறவன்!
கல்லையும் வெட்டுங் கடுந்தோளன் - எல்லையிலா
வீரம் முடிகொண்ட வேந்தன் இராவணன்!
ஈரங் குடிகொண்ட ஈசரும் - சீரோங்கும்
வெற்றியைச் சூட்டிய வேங்கையிடம் ''மீட்டுக
நற்றமிழ்க் கீதமே! ஞாலமும் - பெற்றிடவே
இன்னிசை இன்பம்!'' இறைவனின் சொல்கேட்டுத்
தன்தலை கைநரம்பில் சங்கீதம் - நன்கிசைத்தே
ஏழிசைப் பண்ணினை யாசகமாய்த் தந்திட
யாழிசை கேட்டிரங்கி ஈசனவன் - வாழிசை
சொல்லி மனமுவந்து தொண்டனிடம் ஒப்படைத்தான்
வல்லழகு சந்திர வாள்!

பாவலர் மணியன் செல்வி
பிரான்சு

அன்னைத் தமிழே!

அன்னைத் தமிழே! அறிவின் ஒளியே!
உன்னைப் புகழ ஓடி வந்தேன்!
கற்றவர் உன்மேல் காதல் கொள்வர்!
மற்றவர் உன்னிடம் மயங்கி விழுவர்!
உலகம் உன்னை உயர்த்திப் பாடும்!
பலவும் அறியப் பண்பாய்க் கூடும்!
கடமை யாவும் கருத்தாய்க் காட்டும்
உடைமை நீயே! உயர்புகழ்த் தாயே!
வண்ணம் கொண்ட வளமார் தமிழே!
எண்ணம் போல ஏற்றம் தருவாய்!
அவையில் வந்தே ஆற்றல் தந்தே
சுவைக்கத் தருவாய் சுந்தர பாக்கள்!
சிந்தனைத் துளிகளைச் சீராய்ச் சிந்தி
வந்தனை செய்தேன்! வாழ்த்தி மகிழ்ந்தேன்!
கண்ணால் பருகிக் கருத்தில் உருகிப்
பண்ணில் பெருகி என்னுள் படர்வாய்!
மணியே! ஒலியே! மருந்தாய் வருவாய்!
அணியே! அறிவே! அரணே தருவாய்!
அற்புகம் உன்றன் அழகிய சொற்கள்!
பொற்பதம் பணிந்தேன் புலமை பொழிகவே!

பாவலர் பத்ரிசியா பாப்பு
பிரான்சு

மஞ்சள் வண்ணக் கிளியே!

மஞ்சள் வண்ணக் கிளியே - என்னை
மயக்கும் உன்தன் விழியே!
கொஞ்சி பேசும் கிளியே - உனக்குக்
குரல்தான் இனிய மொழியே!

வஞ்ச மில்லாக் கிளியே - நீ
வந்து பேசு ஒரு துளியே!
அஞ்ச வேண்டாம் கிளியே - உன்
அழகுப் பார்வை உளியே!

பார்க்கப் பார்க்க அழகு - என்றும்
பக்கம் வந்து பழகு!
செக்கச் சிவந்த அலகு - நீ
சிறகு அடித்தால் அழகு!

கொட்டை உமக்குப் பிடிக்குமா -அதைக்
கொண்டு வந்து தரட்டுமா?
குட்டை அலகில் கொறித்திட - நானும்
கொஞ்சம் சுமந்து வரட்டுமா?

உருட்டும் விழியைத் தேடியே - நான்
உன்னிடம் வருவேன் ஓடியே!
மிரட்டும் தொணியில் பார்க்காதே - நீ
மனமதில் சினமதைச் சேர்க்காதே!

மினுமி னுக்கும் கிளியக்கா - உன்தன்
மேனி யெல்லாம் ஒளியக்கா!
அணுவ ணுவாக உன்னையே - அதிலும்
அதிகம் அளப்பேன் கண்ணையே!

கவிஞர் அ.முத்துசாமி
தாரமங்கலம்

அமுதும் உனக்கே இணையாமோ ?

அருளின் கடலே! அருவி நடையே!
அழகு தமிழே! வருவாயே!
பெருமை நினைவே! சிறுமை இலையே!
பெருகும் அறிவே தருவாயே!
(அருளின் கடலே)

அழியும் நிலையே அணுவும் கிடையா
அமுதும் உனக்கே இணையாமோ?
மழலை மொழியோ டினிமை நறுந்தேன்
மதுவை எமக்கே அளித்தாயே!
(அருளின் கடலே)

புலவர் கொடையே! புகழின் உருவே!
புதுமைக் கலையே! வளர்வாயே!
கலையின் பொழிலே கவிதை மலரே
கனியின் சுவையே பொழிவாயே!
(அருளின் கடலே)

எமது விழியே! விழியின் ஒளியே!
இனிமை இவண்நீ தருவாயே!
தமிழர் துணையே! இளமை எழிலே!
தலைமை மகிழ்வோ டொளிர்வாயே!
(அருளின் கடலே)

வங்கனூர் அ.மோகனன்.



வலங்கைமான் எங்கள் ஊர்

நேரிசை கலிவெண்பா

காவிரித் தாயின் கனிச்சுவைப் பெண்ணவள்!
பூவிரி சோலையைப் போர்த்தியவள்! - ஆவினம்
வாழ வளமும் வழங்கும் நதியவள்!
ஆழம் நிறைந்தவள்! அன்பிசைக்கும் - யாழவள்!
ஓடி வளம்பெருக்கும் ஒய்யாரம் கொண்டவள்!
வாடி வதங்கா வலங்கையாம் - தேடி
வருவோர்க் கருள்நல்கி வாரி வழங்கும்
சிருங்கார சீதளா தேவி - அருளால்
அழகுடன் வீற்றிருக்கும் அற்புத ஊராம்!
பழகச் சிறந்தவரின் பண்பூர் - உழவுடன்
செங்கல் பெருக்கும் சிறப்பாம் வணிகமும்
எங்கும் பெருகும் எழிலூராம்! - தங்கிய
வெள்ளைப் பரங்கி வியந்தே புகழ்ந்திட்ட
பள்ளியா சானாம் பணியிலே - வெள்ளியில்
நாக்குப் படைத்திட்ட நல்வீர னென்றன்றே
வாக்கில் உயர்சீனி வாசனருள் - காக்கும்!
இசையில் சிறந்தே இழுத்திட் டுலகைத்
திசைகள் முழுக்கத் தெரிவர் - அசைத்திடுவர்
பாடும் குரலால் படித்திடும் பாட்டுடன்
ஆடும் நடனத்தால் அற்புதங்கள் - சூடும்!
தவிலுடன் நாதத்தில் தக்கார் எனவே
புவிதனில் மேம்பட்டோர் பூமி - நவில்கின்றேன்
நான்பிறந்த நல்லூரை நற்றமிழ் வாழ்ஊரைத்
தேன்சுரந்த பாட்டில் திளைத்து!

பாவலர் இராம.வேல்முருகன்
வலங்கைமான்

தமிழ்ப்பாவை

வானம் பனிபொழிய வையம் துயில்களையக்
கானம் குயில்பொழியக் காதுகளில் தேன்வழிய
தேனின் அடைசுமக்கும் தேன்மரத்தின் கொப்பசைய
மானின் விழிமடவார் வைகறையில் தானெழுந்தே
தானும்நீ ராடித் தமது துணையெழுப்பிப்
போனார்கள் வாசலிலே பூசணிப்பூத் தான்சிரிக்கும்
ஞானத்தின் இல்லறத்தின் நாற்றங்கால் நம்மினத்தின்
மானத்தின் வேராம் மகிழ்வாய் தமிழ்ப்பாவாய்!

தெற்குப் புவிமகளே தேசத்தின் மூத்தவளே
சொற்கும் பொருட்கும் உயிராமெய் ஞானமென
நிற்கின்ற தாயேயெம் நித்திலமே செந்தமிழே
கற்கின்றார் நாவில் கவியாய் மலர்பவளே
நற்கவிதை செய்வோர்க்கு நல்லவளே பாதன்னை
விற்பவர்கள் தம்மை விரும்பாத தூயவளே
அற்பர்கள் நாக்கில் அமராப் பெருமகளே
பொற்கையென் வாக்கில் பொலிவாய் தமிழ்ப்பாவாய்!

காற்றும் உனைப்பேசும் காவியங்கள் தாம்பேசும்
நாற்றும் உனைப்பேசும் நானிலங்கள் தாம்பேசும்
சேற்றுழவர் நாக்கும் தினமும் உனைப்பேசும்
ஆற்றோடும் ஓட்டமும் அன்னைத் தமிழ்பேசும்
வேற்றாரும் நாளும் விரும்பியே பேசுமுனை
போற்றத் தெரியாமல் புத்தியின்றி நந்தமிழர்
வீற்றிருப்பார் அன்னார் விழிப்புணர்வு தான்பெறட்டும்
ஆற்றல் உணரட்டும் அம்மா தமிழ்ப்பாவாய்!

பாவலர் பொற்கைப் பாண்டியனின்

மதுரை

பாயுமொளி நீயெனக்கு!

கூந்தலென்னும் கார்மேகம் பூச்சூடிப் போர்செய்யும்
கொண்டநெற்றி வான்பிறையின் கூறா - யமன்
கொல்லவதற்கு ஏறிவரும் தேரா!
நீந்துமிரு கெண்டைவிழி! வாலருகே கேள்விக்குறி!
நெஞ்சம்தொடும் ரெண்டுமவை காதா - என்
நெஞ்சம்போலக் கம்மலாடும் தோதாய்!

தேன்வடியும் பூவிதழ்கள் வண்டமராத் தாமரையோ?
தேவதைக்குப் பால்குளித்த பல்லோ - அதில்
தீர்ந்திடாமல் சேர்ந்தொழுகும் கள்ளோ!
ஆழ்ந்தகன்ற நீலக்கடல் ஆழிமுத்துச் செய்தவமோ?
அன்னமவள் கொங்கைதனைத் தழுவும் - அதை
அங்குமிங்கும் கண்டுநெஞ்சம் நழுவும்!

உண்டுறக்கம் கண்டதில்லை உன்நினைப்போ ஓயவில்லை
உள்நெஞ்சில் சுத்துறாயே தோழி - உன்னால்
ஓயாமல் கத்துதென்தன் ஆழி!
வண்ணக்கிளிப் பேச்செடுத்து வாசநறும் பூத்தொடுத்தென்
வாலிபத்தை ஏற்றுகிறாய் கூண்டில் - இன்னும்
வாட்கண்ணால் போடுகின்றாய் தூண்டில்

சண்டைசெய்யும் கெண்டைவிழி சாமத்திலும் பேசுதடி
சத்தடங்கிப் போனதென்தன் ஆவி - எனைச்
சாகடிக்கப் பிரம்மன்செய்த பாவி!
எண்ணமெல்லாம் உன்நினைப்பு ஏற்றமில்லை என்பிழைப்பு
இந்நிலையில் போதைகொண்டேன் பாட்டில் - என்னை
ஏன்விட்டாய் உன்நினைப்புக் காட்டில்.!

ஓயும்நதி மேல்விழுந்து விம்பம்காட்டும் வெண்ணிலவின்
ஒப்பில்லாப் பேரொளிதான் நீயும் - முகம்
உள்நுழைந்து ஈரவுயிர் காயும்!
தீயின்விழி சுட்டெரிக்க உள்ளமெல்லாம் பூப்பூக்கும்
தேவதையே எங்குற்றாய் தீயை - உன்னால்
தேர்ந்தெடுந்தேன் காதலெனும் நோயை.!

வாயின்வழிப் பேச்செல்லாம் வாழவைக்கும் மூச்செல்லாம்
மஞ்சள்நிலா உனைத்தானே தேடும் - நீ
மஞ்சம்தொட வில்லையெனில் வாடும்!
பாயுமொளி நீயெனக்கு! பாவையின்றி வாழ்வெதற்கு!
பாடையிலும் உன்நினைப்பே வேணும் - நீ
பக்கம்நின்றால் பாகலாகும் தேனும்!

பாவலர் வள்ளிமுத்து

முத்தமிழே

முத்தமிழே, முத்துமணி யார வித்தே!
வித்தகமே, வெற்றிவிளை யாடும் சித்தே!
சித்தமெல்லாம் வாசமள்ளும் பூவின் கொத்தே!
கொத்துமெழில் பேரழகே. கோடிச் சொத்தே!
சொத்தினுக்குள் சொத்துவரும் நாதச் சத்தே!
சத்தமில்லா மௌனமொழி கொண்டேன் பித்தே!
பித்தனுக்கும் ஞானமொழி சொன்ன அத்தே!
அத்திமுகத் தோன்வளர்த்த ஆழி முத்தே.

எத்தனையோ மொழிபிறந்த இந்த மண்ணில்
என்றுவந்தாய் என்றறியக் கூடு தில்லை.
அத்தனைக்கும் தாய்மொழியாய் உன்னை யன்றி
ஆருளர்சொல்... ஆதியந்தம் வென்றாய் இன்றும்
முத்தமிழாய் எண்திசையும் ஆளு கின்றாய்!
முடிவில்லா முதல்நீயே முற்றும் நீயே.
சித்தமெலாம் நிறைந்தவளே எங்கள் தாயே
செந்தமிழாய் முந்திவந்த முத்து மாரி.

முன்னாலும் பின்னாலும் உன்னைப் போல
மூச்சோடு கலந்தமொழி எங்கும் காணேன்.
தொன்மைமொழி யானாலும் நித்த நித்தம்
துளிர்க்கின்ற புத்திளமை உன்னில் கண்டேன்.
உன்பாதம் சரண்டைந்தேன் எண்ணம் தன்னில்
உருவாகிக் கருவாகி மண்ண ளந்த
அன்னையுனை நான்மறவேன். கால காலம்
ஆல்போலத் தழைத்துநிற்பாய் நீடு வாழின்

"அகன்" அனுராதா கட்டபொம்மன்.
திருச்சி

செந்தமிழே!

எடுப்பு!

தேனுக்கும் பாலுக்கும் மேலானது - நம்
தீந்தமிழ் எந்நாளும் உயர்வானது!
(தேனுக்கும்)

தொடுப்பு!

வானுக்கும் நிலவுக்கும் இணையானது - நம்
மங்காத தமிழொன்றே சுவையானது!
(தேனுக்கும்)

முடிப்பு!

மூவேந்தர் மடியமர்ந்து முறைகண்டது - தமிழ்
மூவாத மொழியாக நிறைகொண்டது!
பாவேந்தர் பலராலும் உரைபூண்டது - தமிழ்ப்
பகையாளர் வலைவிட்டுச் சிறைமீண்டது!
(தேனுக்கும்)

நாவேந்தர் நாவினிலே நலம்பெற்றது - தமிழ்
நலமோங்கும் சான்றோரால் நயமுற்றது!
பூவேந்திப் போற்றிடவே புகழ்பூத்தது - தமிழ்
புவியோங்கும் மொழிகளிலே நனிமூத்தது!

கலைமாமணி
கவிஞர் தே. சனார்த்தனனார்
புதுவை - 4

வண்ணக் கம்பன்

கம்பா உன்றன் கவியழகுள்
கலந்து நெஞ்சம் களிக்கின்றேன்!
அம்பாய்ச் சொற்கள் கூரேந்தும்!
அமுதாய்ப் பாக்கள் சுவையேந்தும்!
இம்மா நிலத்தில் விருத்தங்கள்
எழிலாய் ஆள வழிசெய்தாய்!
செம்மாந் துன்றன் புகழ்வாழும்!
சீர்கள் நல்கி எமைக்காக்கும்!

கண்ணின் வண்ணம் காட்டினையே!
காலின் வண்ணம் தீட்டினையே!
விண்ணின் வண்ணம் ஊட்டினையே!
வில்லின் வண்ணம் மூட்டினையே!
மண்ணின் வண்ணம் ஈட்டினையே!
மதியின் வண்ணம் கூட்டினையே!
பண்ணின் வண்ணம் மீட்டினையே!
பண்பார் கம்பா வாழியவே!

தமிழ்நெஞ்சம் அமின்

விக்துவான், கலைமாமணி
மு. இராகாகிருட்டிணன்
பல்மருத்துவர்
(பாவலர்மணி 'சித்தன்')

தலைவர் : கல்விக் கழகம், புதுவை
செயலர் : ஸ்ரீ இராமாநுச நாவலர் மன்றம், புதுவை
உறுப்பினர் : ஸ்ரீ வேதபுரீச்வர் ஸ்ரீ வரதராசப்பெருமாள் நூல் நிலையம், புதுவை
.. கம்பன் கழகம், புதுவை
.. காரியக் கழகம், புதுவை
.. தமிழ்ச் சங்கம், புதுவை

உழுந்து!

நாள் 28-X-05

பாரதி நாகப் பாவல்!

உன் எண்ணத்தில் நீயிழு பொருள்தான்! எனக்கு எழுத்தில்
உள்ளதெலாம் பாரதிக்கு மட்டுமே இன்பம் பொழிகிறதே!
பொன் எனுமுன் நினைவாக்க பாடல் நெஞ்சில்
புதுப்புதுமை பொங்கிப் பொழிகிறதே! தாயவளைப் பொங்கிறதே!
எண்ணுயிய அண்டத்திலுள் கவிஞ! உன்றன்
இதயத்தில் எண்ணமெழும் மேடுபள்ளம் எலாமுந்தன்
நெஞ்சறங்கள் திறந்தவிதம் எனைநெருங்க விடுவதுன்!
தீண்டுகிறேன் உன்புகழை பொழிகிறேன் நன்றே!

கம்பனுக்கு உலகம் பொழுது விடிந்தா எனக்கேட்டாய்!
கற்றவர்கள் உலகம் பொழுதைக் கிடப்புச் சிலையாய்:
படம்புகழைக் கேட்டிடாமல்—பாட்டை மட்டில்
பாடாவதுன் உலகிலுள்ளம் பொழுது எனைத்தாய்!
எடுத்தெடுத்தான் கம்பன்பற்ற அடுக்கி நின்ற
இன்பமெலாம் பொழுதனை உலகில் தித்தாய்!
கேட்டிருந்தால் புகழ் பொழிகிறேன்! பிறந்த நாட்டைச்
சாற்றமிகும் உன் நீதமும் பிரமிக்க நன்றே!

(கந்)

- பாரதி நீகப் பகரிந்துரைத்தாய்! பல்லாண்டு
நீடிக்கவே வாழ்த்தி நிற்கிறேன்!
- பல்லோர் சிறுமை பணிந்திப் பாவலன் நினைத்தாய்!
வில்லாலையுனைக் கொல்லுகொன் தினை!

(மு.பா)

76, இலால்பகதூர் தெரு, புதுச்சேரி - 605 001 ✆ 2222931